*அருந்ததியர்களுக்கான*

*உள் இடஒதுக்கீடு குறித்த*

*நீதியரசர்* **M.S.ஜெனார்த்தனம்** *அவர்களின்*

*தலைமையிலான ஆணையத்திற்கு*

# ஆதித்தமிழர் பேரவையின் கோரிக்கைகள்


*ஆதித்தமிழர் பேரவை*

அ7,சக்தி அடுக்ககம், மாவீரர் நகர்,

வடவள்ளி அஞ்சல், கோயம்புத்தூர் - **641 041**

தொடர்பு எண் **:94430-84642**

மின்நகல் : **0422-2424721**

# ஆதித்தமிழர் பேரவையின் கோரிக்கைகள்

**அருந்ததியர்களுக்கான உள்இடஒதுக்கீடு கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து பரிந்துரை வழங்கும் நோக்கத்தோடு அனைத்துகட்சிகள் அடங்கிய கூட்டத்தைக்கூட்டி முடிவெடுத்து, ஆணையம் அமைத்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், ஆணையத்தின் தலைவரான தங்களுக்கும் ஆதித்தமிழர் பேரவை தனது வணக்கங்களை உரித்தாக்கி கோரிக்கைகளை முன்வைக்கிறது.**

இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் சமம் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூறினாலும், அவர்களிடையே சாதிய ஏற்றத்தாழ்வுகள் மிகுந்து காணப்படுகிறது. சாதி என்பது அந்தந்த மக்கள் கூட்டத்தால் மேற்கொண்டு வருகிற தொழில்களாகும். குறிப்பாக ஒருவர் தமது சாதித்தொழில் என்ன என்று தெரிவித்தால் போதும் அவரது சாதி என்வென்று இலகுவாக சொல்லிவிடலாம்.அவர்கள் செய்துவரும் தொழில்களின் தன்மைகளைப் பொருத்து உயர்வு-தாழ்வு கற்பிக்கப்படுகிறது.

அருந்ததியர்களைப் பொருத்தமட்டில் தங்கள் பேரில் திணிக்கப்பட்ட செருப்பு தைப்பது, மலம் அள்ளுவது ஆகியவற்றை தங்கள் சாதித் தொழில்களாகக் கொண்டுள்ளார்கள். இதுதவிர நகராட்சி– ஊராட்சிகளில், திரையரங்குகளில், உணவகங்களில், மருத்துவமனைகளில் தூய்மைத் தொழிலாளிகளாகவும், மலக்குழிகளில் இறங்கி உயிரைப்பணயம் வைத்து தூய்மைப்பணி செய்பவர்களாகவும், சாக்கடைகளில் மூழ்கி அடைப்பு நீக்குகிற வேலை செய்கிறவர்களாவும், கிராமப்புறங்களில் கூலி விவசாயத் தொழிலாளிகளாகவும், பண்ணை அடிமைகளாகவும், பன்றி வளர்ப்பவர்களாகவும், குவாரிகளில் கல்லுடைப்பவர்களாகவும் அருந்ததியர்கள் இருந்து வருகிறார்கள். இதுமட்டுமின்றி கிராமங்களில் இறந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வது, சேதி சொல்லப்போவது, இறந்த மாடுகளை அகற்றுவது, இறப்பு போன்ற நிகழ்வுகளில் இசைக்கருவிகள் வாசிப்பது போன்ற மனிதன் இழிவாகக்கருதும் வேலைகளையும் செய்கிறார்கள். மனிதன் இழிவாகக் கருதுகிற பொருட்களாகிய செருப்பு, துடைப்பம் ஆகிய பொருட்கள் இன்று அருந்ததியர்களின் கைகளில் இருக்கிறது. இவற்றை விட்டுவிடவேண்டும் என்கிற சிந்தனையின்றி தொழிற்சங்கங்கள் கூட அத்தொழில்களை நவீனப்படுத்தி அதனை அருந்ததியர்களே செய்ய வேண்டும் என்பதான நிலை இருந்தது.

**அந்த அருந்ததிய சாதிக்குள் பிறந்து எங்களுக்கென்று ஆதித்தமிழர் பேரவை என்ற இயக்கம் ஏற்படுத்தி மேற்படி இழிவுகளை எடுத்துச்சொல்லும்வரை வேறு எத்தகைய புரட்சிகர -சமுதாய சிந்தனை அமைப்புகள் கூட இதைக்கண்டு கொள்ளவில்லை.** ஆகவே அருந்ததியர்களை மனிதனாகக் கருதுகிற சிந்தனை கூட சகமனிதர்களிடம் இல்லை. தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு கூட இழிவு இருக்கிறது. அதைக்காட்டிலும் மிகமோசமான இழிவு அருந்ததியர்களுக்கு உள்ளது. தீண்டத்தகாதவர்களே கூட இழிவாக கருதுகிற இழிவு நிலை அருந்ததியர்களுக்கு உள்ளது. இந்த இழிவைப்பற்றிய கவலை எதுவுமின்றி இந்தகைய தொழில்களை வேறு யார் செய்வார்கள்? என்று கேட்பவர்களாகவும், இந்தத் தொழில்களை செய்வதற்காகவே தாம் பிறந்தவர்களாகவும் தம்மை நினைத்துக் கொண்டுள்ளார்கள். அதுமட்டுமின்றி மாப்பிள்ளை என்ன வேலை செய்கிறார் என்று மணமகன் வீட்டாரிடம் கேட்டால் "நம்ம வேலை தான் செய்கிறார்" என்று துப்புரவுத் தொழிலைக் குறிப்பிட்டுச் சொல்கிற அவல நிலையை வேறு எங்கும் காணமுடியாது.

அருந்ததியர்களின் வாழ்வு நிலையோ மிகவும் கேவலமாக உள்ளது. கூலி விவசாயிகளாகவும், பண்ணை அடிமைகளாகவும், மலம் அள்ளுவோராகவும், செருப்பு தைப்பவராகவும் இன்னும் பிற இழி தொழில்களைச் செய்கிறவராகவும் வாழ்கிற அனைத்து அருந்ததியருக்கும் வாழ்வு நிலை ஒன்றாகவே உள்ளது. குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பும் நேரத்தில் வேலைக்குச் செல்வோராகவும், குழந்தைகளின் கல்வி உள்ளிட்ட தேவைகளை உடனுக்குடன் அறிந்து அதனை நிறைவு செய்ய இயலாதவர்களாகவும், அந்த குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க கல்வியறிவு இல்லாதவர்களாகவும்- கல்விப்பயனை அறியாதவர்களாகவும், அந்தக்குழந்தைகளை வேலைக்கு அனுப்பினால் அந்தக்குழந்தைகளின் வருமானத்தை எதிர்பார்த்திருப்போராகவும், இந்த நிலை தவறு என்று எடுத்துச் சொல்லக்கூட யாரும் இல்லாத வராகவும் அருந்ததியர்கள் இருக்கிறார்கள். இதனால் பள்ளிகளில் கல்வி கற்கச்செல்கிற அருந்ததியக் குழைந்தைகளின் எண்ணிக்கை மிகமிகக்குறைவாக உள்ளது. அந்த குழந்தைகளும் தங்கள் கல்வியை பாதியில் நிறுத்திவிடுவதால் , உயர்நிலை-மேல்நிலை-கல்லூரிகளில் படிக்கிறவர்கள் எண்ணிக்கை அருகிப்போய்விடுகிறது. இதனால் அரசு பணி மற்றும் மருத்துவம், பொறியியல், சட்டம் உள்ளிட்ட தொழில் நுட்பத் தொழில்களில் அருந்ததியர்கள் இடஒதுக்கீட்டின் பயன்களை அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறது. சகோதர சாதிகளே அருந்ததியர்களுக்கான இடஒதுக்கீட்டின் பயன்களை அனுபவித்துக் கொண்டுள்ளார்கள்.

கோவை சோமனூரில் பேருந்தில் சகலரும் போல சரி சமமாக பயணம் செய்ததற்காக கவுண்டர் சாதியினரால் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட செகுடந்தாளி முருகேசன் ஓர்அருந்ததியர்.காவல் நிலையத்தில் புகார்கொடுத்தும் நடவடிக்கையில்லை என்பதால், கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே தன்மீது தீவைத்துக்கொண்ட பட்டணம் சம்பத் ஓர் அருந்ததியர். நக்கலமுத்தன்பட்டி பஞ்சாயத்து தலைவர் சக்கையன் தான் சொன்னபடி கேட்கவில்லை என்பதற்காக நாயக்கர் சாதியைச் சேர்ந்தவர்களால் அடித்துக் கொல்லப்பட்ட சக்கையன் ஓர் அருந்ததியர். சாளரப்பட்டியில் இரட்டைக்குவளை முறை இருந்தது. அதனை எதிர்த்த காரணத்தினால் வன்னியர்களால் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டவர்கள் அருந்ததியர்கள். காளப்பட்டியில் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று கேட்டதற்காக அருந்ததியர்கள் மீது கொலைவெறித் தாக்குதல்களையும், வீடுகளை தீவைத்தும், பொருட்களை சூறையாடியும், குழந்தைகளை பள்ளிக்குச் செல்லவிடாமல் தடுத்தும், கவுண்டர் சாதியினரால் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டவர்கள் அருந்ததியர்கள். இப்படியாக சாதி இந்துக்களால் அருந்ததியர்கள் வன்கொடுமைக்கு ஆளாகிவருகிறார்கள். அருந்ததியர்கள் இம்மண்ணின் மைந்தர்கள் ஆவார்கள். அவர்கள் பேசுவது தொன்மையான தமிழ் ஆகும். இந்த வரலாறு தெரியாதவர்கள் அருந்ததியர்களை வந்தேரிகள் என்றும், மொழிச் சிறுபான்மையினர் என்றும் இழித்தும்,பழித்தும் பேசிவருகிறார்கள்.

இப்படியாக சாதி இந்துக்களால் மட்டுமின்றி சகோதர சாதியினராலும் அருந்ததியர்கள் சாதிய வன்கொடுமைக்கு உள்ளாகி வருகிறார்கள். விழுப்புரம் கரடிச்சித்தூரில் பறையர் பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்ட அருந்ததியப் பையனின் சகோதரியை பறையர்கள் பாலியல் வன்முறை செய்து, கொலைசெய்தனர். விருதுநகர் குண்டாயிருப்பில் சைக்கிளில் சென்ற அருந்ததியச் சிறுவன் மீது கல்லெரியப்பட்டதை கேட்டதற்காக அருந்ததியச்சேரி கொளுத்தப்பட்டது. அருந்ததியர்கள் அனைவரும் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். சக்கிலியப் பசங்களுக்கு இவ்வளவு திமிரா என்று சகோதர பறையர் சாதியினரால் பேசப்பட்டது.

இப்படியாக தமிழகம் முழுமைக்கும் ஒடுக்குமுறைக்குள்ளாகிக்கொண்டுள்ள சாதியாக அருந்ததியச் சாதி உள்ளது. மனித உரிமை அற்ற சாதியாக அருந்ததிய சாதி உள்ளது. வன்கொடுமைகளுக்காவும் -மனித உரிமைகளுக்காவும், திருநங்கையர்களுக்காக, நரிக்குறவர்களுக்காக, பாலியல் தொழிலாளர்களுக்காக இன்னும் எத்தனையோ பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கிறார்கள். அவர்கள் கூட மனித மாண்புகளைத் தொலைத்து விட்டு செருப்பு தைக்கவும், மலம் அள்ளவும் செய்கிற அருந்ததியர் சமுதாயம் தொடர்பாக இயக்கங்கள் எடுக்கவில்லை- குரல் கொடுக்கவில்லை.

அருந்ததியர் நலனுக்காக அருந்ததியர் இயக்கங்களும் வேலை செய்யவில்லை. ஏனென்றால் அருந்ததியர்களின வரலாற்றை மீட்டு எடுப்பது பற்றியோ, மூடநம்பிக்கைகளில் முகிழ்ந்து கிடப்பது பற்றியோ, முன்னேற்றத்திற்கு திட்டமிடுதல் பற்றியோ எந்த சிந்தனையும் அற்றவர்களாக இயக்கங்களும்-இயக்கத் தலைமைகளும் கடந்த காலத்தில் இருந்தன. பொதுவாக அவர்களுக்கேகூட ஏதும் தெரிவதில்லை. அவர்களும் இலவச மனைப்பட்டா வாங்கித்தருவது, குடும்பஅட்டை வாங்கித்தருவது என்பது போன்ற செயல்களைச் செய்து, மக்கள் தலைவராக தங்களைக் காட்டிக் கொண்டார்கள். இன்னும் சிலர் புகழ்போதைக்கு அடிமையாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் அருந்ததிய உட்பிரிவுகளுக்குள் பெண் பார்ப்பதும், மாப்பிள்ளை பார்பதுமான வேலைகளை செய்கிறார்கள்.

அருந்ததியர்களின் பொருளாதார நிலையோ மிக மிகக் கீழானதாக உள்ளது. இந்தியாவில் இந்துக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் பொருளாதார நிலையில் கீழானவர்களாக உள்ளார்கள் என்று சொல்லப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர்களிலே அருந்ததியர்களின் நிலை மிகக்கீழானதாக உள்ளது.தொழிலிலே மிக இழிவானதாக பெரும்பான்மை மக்களால் கருதப்படுகிற செருப்பு தைத்தல், மலம் அள்ளுதல் போன்ற இழிவான தொழில்களை செய்கிறார்கள்.அதில் கிடைத்துவரும் சொற்பமான வருமானத்தில் பெரும்பகுதியை குடித்தும், வெற்றிலைப் பாக்கு புகையிலை உள்ளிட்டவைகளுக்கு செலவு செய்து விடுகிறார்கள். அவர்கள் அணிந்துள்ள காக்கிச்சட்டை, காவிப்பற்கள் மாறாமல்- மாற்றாமல் இறந்துவிட்ட அருந்ததியர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. மலம் அள்ளும் தொழில் ஏற்படுகிற அருவருப்பு மற்றும் அதனால் உண்டான மனநிலை பாதிப்புகளால் குடிக்கிறார்கள். அவர்களால் வயிறார உணவருந்த முடிவதில்லை. இதனால் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்வியைப்பற்றியும் கவலை ஏற்படுவதில்லை. சுயமரியாதை சிறிதும் அற்றவர்களாகி விடுகிறார்கள். அதனால் வேலை செய்கிற இடங்களில் பண்டிகை நாட்களில் பிச்சை எடுத்து உண்ணவும், கொடுக்கிற காசை கை நீட்டி வாங்கவும் பழகி விடுகிறார்கள். மற்ற சாதியினரும் அவர்களிடம் வேலை வாங்கும் வரை அன்பு காட்டி வேலை வாங்கிக் கொண்டு அத்துடன் அவர்களை தனிமைபடுத்திவிடுகிறார்கள். அருந்ததியக் குடும்பங்களின் சொத்துமதிப்பு மூன்றாயிரம் ரூபாய்களில் இருந்து ஐந்தாயிரம் ரூபாய்களுக்குள் தான் இருக்கும். ஏனென்றால் வீடுகளை கூரையால் பெரும்பாலும் அமைத்திருக்க மாட்டார்கள். தார்பாய்களாலும், பிளக்சு பேனர்களாலும், மறைத்து அதில்குடியிருக்கிறார்கள். ஓரிருவர் தான் வாழ முடியம் என்பதான வீட்டில் அதற்கும் மேலானவர்கள் தங்கிவாழ்கிறார்கள். பெரும்பாலும் அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கத் தகுந்ததல்லாத இடத்தில் குடியிருக்கிறார்கள். அவ்விடங்கள் குப்பை கொட்டி வைக்கப்படும் இடமாகவோ, சாக்கடையாகவோ, திறந்தவெளி கழிப்பிடத்தின் அருகிலோ இருக்கிறது. அணிந்துகொள்ள ஓரிரு கந்தை துணிகள் மூட்டையாகக்கட்டி வைத்திருப்பார்கள். திருமணம், கோயில் விழாக்கள் போன்றவற்றிற்கு கடன் வாங்கி செலவு

செய்வார்கள். அந்த கடனுக்கு ஆயசு முழுவதும் வட்டி கொடுத்து வருவார்கள். இவற்றிற்கெல்லாம் விதிவிலக்காக ஓரிருவர் இருக்கலாம். பெரும்பாலானவர்களின் வாழ்நிலை இப்படித்தான் உள்ளது.

அருந்ததியர்களின் வாழ்நிலை இப்படித்தான் இருந்ததா எனில் இல்லை. அருந்ததியர்கள் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த வேளிர் குடியினர், அதியர் குடியினர் என்ற குடிமரபில் அதியர் குடியைச்சார்ந்தவர்கள். அருந்ததியர்கள் தொன்மையான தமிழ் பண்பாடும், கலாச்சாரமும் நிறைவாக அமையப்பெற்றவர்கள் ஆவார்கள். இன்றைக்கு தமிழ் கலாச்சாரம், பண்பாடு என்பதான அனைத்து பண்புக்கூறுகளும் அருந்ததியர்களிடம் மட்டுமே உள்ளது. அருந்ததியர்களில் ஆண், பெண் வேறுபாடு இல்லை. விதவைக்கு உடனடியாக ஏற்கெனவே திருமணமாகாத ஒருவருடன் திருமணம் நடக்கும். விரும்பினால் சேர்ந்து வாழலாம், விரும்பாவிட்டால் விலகிக்கொள்ளலாம். அந்த நேரத்தில் பிறந்த குழந்தை இழிவாக சமூகத்தில் கருதப்படாது. ஆண், பெண் இருவரும் சேர்ந்து மது அருந்தலாம். பாலுறவில் ஆண், பெண் பேதமற்ற முழுவிடுதலை ஆகிய உயரிய கலாச்சாரம் அருந்ததியர்களுடையது ஆகும். இது தான் தமிழ் கலாச்சாரம் என்று இலக்கியங்கள் கூறுகிறது. இதன் சொந்தக்காரர்களாகிய அருந்ததியர்கள் தோட்டிகள் என்றும் சக்கிலியர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். அருந்ததியர்கள் நாடாண்டவர்களாகவும், வள்ளல்களாகவும், வீரர்களாகவம், இருந்திருக்கிறார்கள். தகடூரைத் தலைமையாகக் கொண்டு ஆண்ட வள்ளல் அதியமான் அருந்ததியர் ஆவார். சாதி எதிர்ப்பு போரில் உயிர் நீத்த மதுரை வீரன் அருந்ததியர் ஆவார். விடுதலைப்போரில் வெள்ளையர்களை எதிர்கொண்ட ஒண்டி வீரன் அருந்ததியன் ஆவார். இவ்வாறாக வாழ்ந்த அருந்ததியர்கள் சமரசமற்ற சனாதான இந்து எதிர்ப்பாளர்களாக விளங்கியதால் செருப்பு தைப்பவர்களாகவும் இழிதொழில் செய்யபவர்களாகவும் மாற்றப்பட்டார்கள்.

அருந்ததியர்களின் கடந்தகால நூற்றாண்டு வரலாற்றை கன்னல்செட்ரல்ப் **(Gunnel Cederlof)** என்ற சுவிட்சர்லாந்து நாட்டை சார்ந்த ஆய்வாளர் எழுதிய பாண்ட்சு லாசுட் **(Bonds lost)** என்ற நூல் தெளிவாக்குகிறது. அருந்ததியர்கள் மேட்டுநிலம் என்று சொல்லப்படுகிற (குறிஞ்சி நிலம்) ஆறு, குளங்கள் இல்லாத பெரும்பாலும் கிணற்று பாசனத்தை நம்பியே வேளாண்மை நடத்த வேண்டியிருக்கிற நிலப்பகுதிகளிலேயே மிகுந்த அடர்த்தியான எண்ணிக்கையில் வாழ்ந்து வருபவர்கள். 1950- வரையிலும் இத்தகைய பகுதிகளில் கவளை (பரியை) நம்பியே விவசாயம் நடைபெற்றது. கவலை என்பது மாட்டுத்தோலைப் பதப்படுத்தி தயாரிக்கப்பட்ட பைகள் ஆகும். ஒரு பை தயாரிக்க 6-மாதங்கள் ஆகும். இத்தகைய உயரிய தொழில் நுட்பம் அருந்ததியர்களுக்கு மட்டுமே சொந்தமானதாகும். கவளைகள் பழுதடைந்தால் அதை அருந்ததியர்களே சரிசெய்யதாக வேண்டும். இவ்வாறாக அருந்ததியர்களை நம்பியே மேட்டுப்பகுதியில் விவசாயம் நடைபெற வேண்டியிருந்தது. இவ்வாறான அருந்ததியர்கள் பின்னாளில் பண்ணையாட்களாக மாறினார்கள். அதன்பின் முன்பணம் பெற்றுக்கொண்டதால் பணம் கொடுத்தவரின் நிலத்தில் நிரந்தரப் பணியாளர்களாக பண்ணை அடிமைகளாக மாறினார்கள். அறுவடையின்போது ஈடுசெய்ய முடியாத இழப்பிற்கு நிலவுடைமையாளர்களால் அருந்ததியர்களுக்கு மிகச்சிறிய பங்கு வழங்கப்பட்டது. இதைத்தவிர நிலவுடைமையாளருக்குரிய மாடு இறந்தால் அதனை எடுத்துக்கொள்ள உரிமை வழங்கி அதற்கீடாக இழவு (மரணச்செய்தி சொல்லப் போவது, சாவுமேளம் வாசிப்பது போன்ற சில கடமைகள் உடையவர்களாக நிலவுடைமையாளர்களுடன் பிணைக்கப்பட்டார்கள்.

இந்நிலையில் 1933-இல் பைகரா மின்திட்டம் துவங்கப்பட்டபோது நிலவுடைமை யாளர்களுக்கு மின்சாரம் விற்பதற்காக அரசு மானிய விலையில் மின் மோட்டார் பம்பு செட்டுகளை அரசு வழங்கி ஊக்குவித்தது. இதனால் அருந்ததியர்களின் கவளைக்கு வேலையில்லாமல் போய்விட்டது. இதைத் தொடர்ந்து 1947 முதல் 1953 வரை 7- ஆண்டுகள் கடுமையான வறட்சியும், பஞ்சமும் ஏற்பட்டது. அருந்ததியர்கள இடம்பெயர வேண்டிய கட்டாயத்திற்குட்பட்டார்கள். இதனிடையே விவசாயம் கவளையை முழுமையாக விட்டுவிட்டு, சொடுக்கினால்(சுவிட்ச்) தண்ணீர் இறைக்கிற நவீன உத்திக்கு விவசாயம் மாறிவிட்டது. தங்கள் இடங்களுக்கு திரும்பிய அருந்ததியர்களுக்கு வேளாண்மையில் முன்பு கிடைத்து வந்த குறைந்த வருமானமும் கிடைக்கவில்லை. பண்ணையாட்கள் முறையில் நிரந்தரமாய் அருந்ததியர்களை பணியில் அமர்த்திக்கொள்ள நிலவுடைமையாளர்கள் மறுத்து விட்டார்கள்.அதுவரை அவர்களுக்கு விளைபொருளாக வழங்கப்பட்ட ஊதியம் பணமாக வழங்கப்பட்டது. நிர்கதியாய் நின்ற அருந்ததியர்கள் தங்கள் குழந்தைகளை குறைந்த முன்பணம் கொடுத்து தங்கள் தொழுவத்து ஆடு,மாடுகளை மேய்க்கும் குழந்தைத் தொழிலாளிகளாய்விட நிர்பந்திக்கப்பட்டார்கள்.

தமிழகத்தைப் பொருத்தவரை தாழ்த்தப்பட்ட சாதியினரின் முன்னேற்றம் என்பது மிஷினரிகள் கொண்டுவந்த மதமாற்றம் என்பதன் வழியாகவே நடந்தது. இம் மிஷினரிகள் அருந்ததியர்களைப் பொருத்தவரை பாராமுகமாக நடந்து கொண்டார்கள். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பறையர், பள்ளர் ஆகிய இதர தாழ்த்தப்பட்டவர்களை மதம் மாற்ற முனைந்த மிஷினரிகள் அருந்ததியர்கள் தாமாகவே மதம் மாற அனுகினாலும் தவிர்த்துவிடவே செய்தார்கள். 1930-களில் அருந்ததியர்கள் மத்தியில் மதமாற்றத்திற்கு முனைந்தனர். மதமாறவிடாமல் சாதி இந்துக்கள் இடைஞ்சல்களையும், வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டார்கள். இது 1950- வரை தொடர்ந்தது.

இவ்வாறாக நவீனத் தொழில் நுட்பம் அருந்ததியர்களின் முதுகெலும்பை முறித்தது. அந்த நவீன தொழில்நுட்பத்தை அரசும் ஊக்கப்படுத்தி துணைபோனது. இதர கைத்தொழில்களான கைத்தறி போன்றவை நசிந்தபோது அரசும், இதர சாதி இந்துக்களும் அவர்களின் வாழ்க்கைக்கு வழிவகை செய்தார்கள். அரசுகளும் தாழ்த்தப்பட்டவர்கள் தானே என்று புறக்கணித்தது. மிஷினரிகளும் அவர்களை புறக்கணித்தார்கள். அதனால் அருந்ததியர்கள் சக தாழ்த்தப்பட்ட சாதியினரைக் காட்டிலும் 50-ஆண்டுகள் பின்தங்கியிருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதன் விளைவு அருந்ததியர்கள் மலம் அள்ளவும், செருப்பு தைக்கவுமான ஒட்டு மொத்த கொடூரங்களை சுமப்பவர்களாக அருந்ததியர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

1920-ஆம் ஆண்டு ராவ்பகதூர் எல்.சி. குருசாமி மற்றும் எச்.எம். செகநாதன் ஆகியோர்களால் அருந்ததியர்களின் முதலாவது அமைப்பாகக் கருதப்படுகிற அருந்ததிய மகாசபா தோற்றுவிக்கப்பட்டது. அருந்ததியர்களின் முன்னேற்றம் என்பது கல்வியால் மட்டுமே சாத்தியம் என்ற தெளிவுடன் சென்னையை ஒட்டிய பகுதிகளில் அருந்ததியர்களுக்காக ஒன்பது இலவச பாட சாலைகளைத் தொடங்கி நடத்தி வந்தனர். அரசு தனது நிதியுதவியை நிறுத்தியதால் அவர்களின் அந்த முயற்சியும் பாதியில் நின்று போனது. இது தவிர 1940-களில் தோல் பணியாளர்களின் நல்வாழ்வை உத்தேசித்து பெரம்பூர் லெதர் ஒர்க்ஸ் கோ ஆப்பரேட்டிவ் சொசைட்டி மற்றும் மாலு கம்பெனி ஆகிய கூட்டுறவு நிறுவனங்களை நிறுவி நசிவின் பிடியிலிருந்து அவர்களை மீட்க முயற்சி செய்தனர். அந்த முயற்சியும் தோல்வியைத் தழுவியது. 1920-இல் எல்.சி. குருசாமி தோற்றுவித்த அருந்ததிய மகாசபையிலிருந்து தொடங்கி 1942 -இல் தோன்றிய தமிழ்நாடு அருந்ததியர் ஊழியர்

சங்கம், சமத்துவ சமாஜம், 1958-இல் தோன்றிய தமிழ்நாடு அருந்ததியர் முன்னேற்ற சங்கம் என்று தொடர்ச்சியான அருந்ததியர்களின் இயக்கம் இங்கு செயல்பட்டது. 1959-இல் அருந்ததிய மக்களுக்கு அரசியல் உரிமைகள் யாவும் விகிதாச்சாரப்படி கிடைக்கவில்லை. இதனை பல நூறு கூட்டங்கள், மாநாடுகள், விண்ணப்பங்கள் மூலமாகக் கேட்டும் இம்மியும் பலன் கிடைக்கவில்லை. எனவே சீற்றத்துடன் அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் லீக்கிற்கு வருகைதந்த அமைச்சர் கக்கனுக்கு கருப்புக்கொடி காட்டப்பட்டது. அப்போதெல்லாம் தனி ஒதுக்கீடு கோரிக்கை எழவில்லை.

1984-ஆம் ஆண்டில் உள்இடஒதுக்கீடு கோரிக்கையை இளைஞர் வழிகாட்டும் பணி **(Youth Guidance Service)** என்ற அமைப்புதான் தமிழ் நாட்டில் முதன் முதலில் முன் வைக்கிறது. அவ்வமைப்பு படித்து அரசு வேலைபெற்ற முதல் தலைமுறை அருந்ததியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பிறகு களத்திலிருக்கும் ஆதித்தமிழர் பேரவை தமிழ்நாட்டில் 15 மாவட்டங்களில் அரசியல்,சமூகத்தலைவர்களை அழைத்து மாநாடுகளை நடத்தியும் மாவட்டந்தோறும் பேரணி, கோரிக்கை, ஆர்ப்பாட்டங்களை நடத்தி கோரிக்கைக்கு வலுசேர்த்தது, மற்ற அருந்ததிய அமைப்புகளும் உள்இட ஒதுக்கீடு கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றன.

"**ஒதுக்கீடுக்கள் வேண்டும் என்று அடிமட்ட வகுப்பினர்கள் கேட்கும்போது அவர்கள் புதிதாக எதையும் கேட்டுவிடவில்லை. அசாதரணமாக எதையும் கேட்டு விடவில்லை. ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை ஆதிக்க வகுப்பினர்களின் வெறி பிடித்த வகுப்புவாதத்திற்கு எதிராக பாதுகாப்பு வேண்டும் என்று வலியுறுத்தும் கோரிக்கையே ஆகும்**"- என்றார் அம்பேத்கர். இதன்படி இட ஒதுக்கீடு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பாதுகாப்பையும், அதன் நலன்களை உத்திரவாதப்படுத்துவதையும் கொண்ட ஒரு ஏற்பாடாகவே அம்பேத்கர் கருதினார். இன்று அருந்ததியர்கள் உள் இட ஒதுக்கீடு கேட்டுப் போராடுவதற்கும் இவையே அடிப்படை காரணங்களாகும்.

அருந்ததியர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படுகிற தொடர்ச்சியான வன்முறைகள் அனைவரும் அறிந்ததே. எனவே அருந்ததியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது உறுதியாகி விடுகிறது. அருந்ததியர்களுக்கு பாதுகாப்பு உள்ளது என்று யாராலும் சொல்லமுடியாது. ஏற்கெனவே இடஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது. அருந்ததியர்களும் அதை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களது நலன்கள் பாதுகாப்பாகத்தான் இருக்கிறது என்று வாதிடும் சிலருக்கு தெளிவை ஏற்படுத்த வேண்டிய அவசியம் நமக்குள்ளது.

இடஒதுக்கீடு என்பது ஒரு குறிப்பிட்ட சாதியின் நலன்கள் பாதுகாக்கப்படுகிறதா? அல்லது புறந்தள்ளப்படுகிறதா? என்பதை உறுதி செய்யக்கூடிய பல்வேறு அளவுகளில் மிக முக்கியமான ஒன்றாகும். ஒவ்வொரு சாதியும் அதனதன் மக்கள் தொகைக்கேற்ற வகையில் கல்வி,வேலை வாய்ப்பு, அரசியல், அதிகாரப்பதவிகளில், பொருளாதாரத்தில் ஒதுக்கீடு பெறும்படியாக அதன் நன்மைகள் பாதுகாக்கப்படுகின்றன அல்லது புறந்தள்ளப்படுகிறது என்பதை உறுதி செய்யும் ஒரு அம்சமாகும். எனவே அருந்ததியர்களின் ஒதுக்கீடு மேற்படி தளங்களில் எந்தளவில் இருக்கிறது என்பதைக் காண்பதன் மூலம் அச்சாதியின் நலன்கள் எந்தளவுக்கு பாதுகாக்கப்பட்டுள்ளது அல்லது புறந்தள்ளப்பட்டுள்ளது என்பதை அறிய முடியும்.

மக்கள் தொகை கணக்கீட்டுத்துறை (Census Of India) வெளியிட்டுள்ள 2001-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கீட்டு அறிக்கையில் பட்டியல் இனத்தவர்களின் கல்வி தொடர்பான புள்ளிவிபரம்;-

பட்டியல் இனத்தவர்களிலுள்ள பல்வேறு சாதிகளின் எழுத்தறிவு குறித்தவிபரம்;-

பறையன் : 65.9%

ஆதிதிராவிடர் : 65.3%

பள்ளன் : 65%

அருந்ததியர் : 53.7%

சக்கிலியன் : 50.9%

**கல்வி கற்றவர்கள் தொடர்பான விபரம் ;-**

| சாதியின் பெயர் | எழுத்தறிவற்றவர் | ஆரம்ப பள்ளி | நடுநிலை பள்ளி | மேல்நிலைப் பள்ளி | பட்டதாரிகள் |
|---|---|---|---|---|---|
| அனைத்து தாழ்த்தப்பட்டோர் | 9.1% | 31.9% | 18.4% | 17.4% | 2.7% |
| ஆதிதிராவிடர் | 6.6% | 31.7% | 19.8% | 19.2% | 3% |
| பள்ளன் | 10.7% | 31.9% | 17.7% | 16.5% | 3% |
| பறையன் | 11.2% | 31.3% | 18.0% | 16.8% | 2.8% |
| சக்கிலியன் | 12.7% | 34.1 | 15.5% | 10.8% | 0.9% |
| அருந்ததியர் | 10.5% | 34.0% | 16.1% | 13.5% | 0.7% |

இது தவிர பல்வேறு தொழிற்படிப்புகளில் (Professional Courses) அருந்ததியர்களின் பங்கு குறித்து அந்தந்த குறிப்பிட்ட இயக்குநர்களிடமிருந்து பெற்ற விபரங்கள் கீழே தரப்படுகிறது.

## மருத்துவம்

| வருடம் | அனைத்து தாழ்த்தப் பட்டவர்கள் | அருந்ததியர் | சக்கிலியர் | மாதாரி | மாதிகா | பகடை | அருந்ததியர் மொத்தம் | சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2000 - 2001 | 202 | 20 | 1 | - | - | - | 21 | 10% |
| 2001 - 2002 | 197 | 10 | 4 | 1 | - | - | 15 | 7% |
| 2002 - 2003 | 156 | 5 | 5 | - | - | - | 10 | 6% |
| 2003 - 2004 | 199 | 7 | 4 | - | 1 | - | 12 | 6% |
| 2004 - 2005 | 235 | 14 | 3 | 1 | - | - | 18 | 7.6% |
| 2005 - 2006 | 253 | 17 | 7 | - | - | - | 24 | 9% |
| 2006 - 2007 | 281 | 8 | 2 | - | - | - | 10 | 3.5% |
| 2007 - 2008 | 273 | 12 | 3 | 1 | - | - | 16 | 5.8% |
| **மொத்தம் 8 கல்வி ஆண்டுகள்** | **1796** | **93** | **29** | **3** | **1** | **-** | **126** | **7%** |

(18 % இடஒதுக்கீட்டை 100 % கணக்கிட்டு பட்டியலிடப்பட்டுள்ளது.)

## பல் மருத்துவம்

| வருடம் | அனைத்து தாழ்த்தப் பட்டவர்கள் | அருந்ததியர் | சக்கிலியர் | மாதாரி | மாதிகா | பகடை | அருந்ததியர் மொத்தம் | சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2000 - 2001 | 4 | - | - | - | - | - | - | 0% |
| 2001 - 2002 | 15 | 1 | 2 | - | - | - | 3 | 20% |
| 2002 - 2003 | 7 | - | - | - | - | - | - | 0% |
| 2003 - 2004 | 9 | 2 | - | - | - | - | 2 | 22% |
| 2004 - 2005 | 16 | 2 | - | - | - | - | 2 | 12.5% |
| 2005 - 2006 | 17 | 1 | - | - | - | - | 1 | 5.8% |
| 2006 - 2007 | 15 | - | - | - | 1 | - | 1 | 6.6% |
| 2007 - 2008 | 16 | 1 | - | - | - | - | 1 | 6.2% |
| **மொத்தம் 8 கல்வி ஆண்டுகள்** | 99 | 7 | 2 | - | 1 | - | 10 | 10.1% |

(18 % இடஒதுக்கீட்டை 100 % கணக்கிட்டு பட்டியலிடப்பட்டுள்ளது.)

## பொறியியல் கல்லூரிகள்

அ. அண்ணா பல்கலைக்கழகம்

| வருடம் | அனைத்து தாழ்த்தப் பட்டவர்கள் | அருந்ததியர் | சக்கிலியர் | மாதாரி | மாதிகா | பகடை | அருந்ததியர் மொத்தம் | சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2006-2007 | 287 | 12 | 7 | - | - | - | 19 | 6.6% |
| 2007-2008 | 295 | 12 | 4 | - | 2 | - | 18 | 6.1% |
| **மொத்தம் 2 கல்வி ஆண்டுகள்** | 582 | 24 | 11 | - | 2 | - | 37 | 6.3% |

(18 % இடஒதுக்கீட்டை 100 % கணக்கிட்டு பட்டியலிடப்பட்டுள்ளது.)

ஆ. அரசு மற்றும் உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள்

| வருடம் | அனைத்து தாழ்த்தப் பட்டவர்கள் | அருந்ததியர் | சக்கிலியர் | மாதாரி | மாதிகா | பகடை | அருந்ததியர் மொத்தம் | சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2006-2007 | 603 | 41 | 20 | 1 | - | - | 62 | 10.3% |
| 2007-2008 | 761 | 44 | 18 | 6 | - | - | 68 | 8.9% |
| **மொத்தம் 2 கல்வி ஆண்டுகள்** | **1364** | **85** | **38** | **7** | **-** | **-** | **130** | **9.5%** |

(18 % இடஒதுக்கீட்டை 100 % கணக்கிட்டு பட்டியலிடப்பட்டுள்ளது.)

இ. சுயநிதி பொறியியல் கல்லூரிகள்

| வருடம் | அனைத்து தாழ்த்தப் பட்டவர்கள் | அருந்ததியர் | சக்கிலியர் | மாதாரி | மாதிகா | பகடை | அருந்ததியர் மொத்தம் | சதவீதத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2006-2007 | 5325 | 251 | 123 | 14 | 5 | 4 | 397 | 7.4% |
| 2007-2008 | 7335 | 365 | 184 | 37 | 8 | 1 | 595 | 8.1% |
| **மொத்தம் 2 கல்வி ஆண்டுகள்** | 12660 | 616 | 307 | 51 | 13 | 5 | 992 | 7.8% |

(18 % இடஒதுக்கீட்டை 100 % கணக்கிட்டு பட்டியலிடப்பட்டுள்ளது.)

அருந்ததியர் பிரதிநிதித்துவம்
சட்டமன்றத்தில்

| **ஆண்டு** | **தொகுதி** | **உறுப்பினர்** | **கட்சி** | **அருந்ததியர் பிரதிநித்துவம்** | **ரிசர்வ் தொகுதி** | **அமைச்சர்** |
|---|---|---|---|---|---|---|
| 1967 | சங்ககிரி | நல்லமுத்து | திமுக | 1 | - | - |
| 1971 | - | - | - | - | - | - |
| 1977 | சங்ககிரி | பி.தனபால் | அதிமுக | 4 | 43 | 1 |
| | நாமக்கல் | ஆர்.அருணாச்சலம் | அதிமுக | | | |
| | அந்தியூர் | பி.குருசாமி | அதிமுக | | | |
| | அவிநாசி | எஸ்.என்.பழனிச்சாமி | காங்கிரஸ் | | | |
| 1980 | சங்ககிரி | பி.தனபால் | அதிமுக | 3 | 43 | 1 |
| | நாமக்கல் | ஆர்.அருணாச்சலம் | அதிமுக | | | |
| | அந்தியூர் | பி.குருசாமி | அதிமுக | | | |
| 1984 | சங்ககிரி | பி.தனபால் | அதிமுக | 4 | 43 | 1 |
| | நாமக்கல் | ஆர்.அருணாச்சலம் | அதிமுக | | | |
| | அந்தியூர் | வி.பி.மாதையன் | அதிமுக | | | |
| | அவிநாசி | பி.லெட்சுமி | அதிமுக | | | |
| | தாராபுரம் | டி.சாந்தகுமாரி | திமுக | | | |
| 1989 | நாமக்கல் | வி.பி.துரைசாமி | திமுக | 2 | 43 | 0 |
| 1991 | பெரம்பூர் | டாக்டர்.எம்.பி.சேகர் | அதிமுக | 1 | 43 | 0 |
| 1996 | அந்தியூர் | பி.செல்வராஜ் | திமுக | | | |
| | தலைவாசல் | கே.ராணி | தமாக | 2 | 43 | 1 |
| 2001 | அவிநாசி | எஸ்.மகாலிங்கம் | அதிமுக | 3 | 43 | 1 |
| | அந்தியூர் | ஆர்.கிருஷ்ணன் | பாமக | | | |
| | சங்ககிரி | பி.தனபால் | அதிமுக | | | |
| 2006 | அவிநாசி | பிரேமா | அதிமுக | 3 | 43 | 0 |
| | அந்தியூர் | பி.குருசாமி | திமுக | | | |
| | சங்ககிரி | வி.பி.துரைசாமி | திமுக | | | |
| | | | | | | |

<u>**சட்டக்கல்லூரியில்**</u>

| வருடம் | அனைத்து தாழ்த்தப்பட்டோர் | அருந்ததியர், பகடை, சக்கிலியர் மாதாரி, மாதிகா | சதவிகிதம் |
|---|---|---|---|
| 2000 -2001 | 385 | 26 | 6.7% |
| 2001 - 2002 | 388 | 11 | 2.8% |
| 2002 - 2003 | 308 | 28 | 9% |
| 2003 - 2004 | 421 | 29 | 6.8% |
| 2004- 2005 | 419 | 19 | 4.5% |
| 2005 - 2006 | 432 | 34 | 7.8% |
| 2006 - 2007 | 623 | 33 | 5.3% |
| **மொத்தம்** | **2976** | **180** | **6.0%** |

மேற்கண்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் கல்வி மற்றும் தொழிற்கல்வியில் அருந்ததியர்களின் கல்வி, தொழிற்கல்வி எவ்வாறு புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று அறியலாம்.

அவ்வாறே பாராளுமன்ற சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய ஆட்சி முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் முக்கியத்துவம் இன்றியமையாதது. அருந்ததியர்களின் சட்டமன்ற பிரதிநித்துவம் பொருத்தவரை நீதிக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் 1920 முதல் 1930 வரை எல்.சி. குருசாமி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். 1929-முதல் 1935-வரை எச்.எம்.ஜெகநாதன் சட்டமேலவை உறுப்பினராக இருந்திருக்கிறார். 1935-முதல் 1960-வரையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் அருந்ததியர்களுக்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லை.

அதன்பின்னர் அருந்ததியர்களுக்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் குறித்த விபரம் கீழே தரப்படுகிறது:-

<u>அருந்ததியர்கள் பிரதிநிதித்துவம் சட்டமன்றத்தில்</u>

பாராளுமன்ற உறுப்பினர்

1996-1998- டெலிபோன் கந்தசாமி, த.மா.க . பொள்ளாச்சி தாலுக்கா

1999- தியாகராஜன், அ.இ.அ.தி.மு.க. பொள்ளாச்சி.

2004- ராணி, காங்கிரஸ் , ராசிபுரம்

பாராளுமன்ற மேலவை உறுப்பினர்

வி.பி. துரைசாமி இருமுறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்.

தமிழ் நாட்டில் பராளுமன்ற தனித்தொகுதிகள் 7 உள்ளன.

இதுவரை 13-மக்களவை தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

மேற்கண்ட புள்ளிவிபரங்கள் அறிவிக்கும் உண்மை என்னவென்றால் நீதிக்கட்சி ஆட்சியில் அருந்ததியர்களின் பிரதிநிதித்துவம் குறைந்தளவில் இருந்தது என்றாலும், காங்கிரஸ் ஆட்சியில் அருந்ததியர்களின் காலம் இருண்ட காலமாக உள்ளது. எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் தான் முதன் முதலாக அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் கிடைத்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையும் அவருடையக் காலத்தில் குறிப்பிட்டுச்சொல்லும் அளவில் இருந்தது. மொத்தத்தில் அருந்ததியர்கள் தங்கள் மக்கள் தொகைக்கு ஏற்ற அளவிலான பங்கை சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ பெற்றிருக்கவில்லை. இந்த புள்ளிவிபரங்கள் அருந்ததியர்களின் பிரதிநிதித்துவம் கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், அதிகாரம் போன்றவற்றில் மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கிறது என்பதை உறுதி செய்யப்போதுமானவை.

இப்படி எல்லா நிலைகளிலும் தமக்குரிய பங்கை அனுபவிக்காமல் வஞ்சிக்கப்பட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருப்பதால், பொருளாதார ரீதியாகவும், வாழ்நிலைகளில் பிறரைச் சார்ந்தும் மிகவும் பலவீனமான நிலையில் இருக்க இந்த சமூகம் காரணமாக இருந்திருக்கிறது. இக்காரணங்களை முன்னிட்டே மேலே குறிப்பிட்ட மாதிரியான வன்கொடுமைகள் அருந்ததியர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படுகிறது. சக மனிதனின் மலத்தை அள்ளிப்பிழைக்கும் கொடூர நிலை அருந்ததியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அறியாமை இருள் அவர்களிடம் மண்டிக்கிடக்கிறது. இப்படிப்பட்ட சூழலில் இருந்து மீளும் வழியாகவே தங்களுக்கு உரிய பங்கை தனியே கோரிப்பெறுவது என்கிற முயற்சியில் அருந்ததியர்கள் இறங்கினார்கள். இந்த முயற்சியும் கால் நூற்றாண்டு காலமாக நீளும் வரலாறுடையது.

இப்படியான சூழ்நிலை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் நிலவுவதை அரசின் சுற்றறிக்கைகள், ஆணையங்கள் மூலம் நாம் அறிந்துகொள்ள முடியும். 1965-இல் [8]இந்திய அரசின் சட்ட செயலராக அப்போதிருந்த பி.என். லோக்குர் **(B.N.Lokur)** என்பவரின் தலைமையில் தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினர் பட்டியலை மறுபரிசீலனை செய்து பரிந்துரை வழங்க லோக்குர் ஆணையத்தை இந்திய அரசு அமைத்தது. பட்டியல் சாதியினருக்காக அரசு வழங்கும் பல்வேறு பயன்களில் பெரும்பங்கை முன்னரே திரண்டுவிட்ட சமூகங்களே கைப்பற்றிக்

கொள்கிறது என்பதைக் கண்டறிந்து தெரிவித்தது. அதோடு இடஒதுக்கீட்டு பயன்கள் அட்டவணைச் சாதிகளில் அடிமட்டத்தில் இருக்கும் சாதிகளுக்குச் சென்று சேரவேண்டுமானால் ஒப்பீட்டளவில் முன்னேற்றமடைந்த 28 சாதிகளை பட்டியலில் இருந்து நீக்க வேண்டுமென பரிந்துரைத்தது.அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட சாதிகளில் சமார்கள், மத்தியபிரதேசத்தில் ஜாதவ்கள், மகாராட்டிரத்தில் மகர்கள், ஆந்திராவில் மாலாக்கள், தமிழ்நாட்டி ஆதிதிராவிடர்கள்.ஆகிய சாதிகள் குறிப்பிடத்தக்கவை.

இதைத்தவிரவும் எஸ்.சி./ எஸ்.டி ஆணையரின் 1988-ஆம் ஆண்டு அறிக்கையின் 42,43-ஆம் பக்கங்களில் கீழ்கண்டவை தெரிவிக்கப்படுகின்றன.

1. மத்திய அரசுப்பணிகளை ஒவ்வொரு ஆண்டும் சில குறிப்பிட்ட சாதிகளே பெரிதும் வசப்படுத்தி விடுகிற நிலையில் எஞ்சியுள்ள பெரும்பான்மைச் சாதிகள் சொற்பமான இடங்களைக்கூட கைப்பற்ற முடியாமலும், அவற்றிலும் சில சாதிகள் ஒரு இடத்தைக்கூட இதுவரையிலும் பிடிக்கமுடியாத நிலையும் இருக்கின்றன.

2. இடஒதுக்கீட்டுப் பணியிடங்களுக்கான போட்டியில் முதல் தலைமுறையாகக் கல்வி கற்கும் இளைஞர்கள் வெற்றி பெறுவதை மிகவும் கடினமானதாகக் காண்கிறார்கள். இப்பிரச்சினையை அதன் அனைத்து பரிமாணங்களையும் பரிசீலித்து பட்டியல் சாதியினர், மற்றும் பட்டியல் பழங்குடியினரில் குறைந்த முன்னேற்றமடைந்தவர்களும் பொதுத்துறை நிறுவனங்களில் நுழையும் வகையில் அவர்களுக்குச் சாதகமான ஒரு சிறப்பு ஒதுக்கீட்டுக்கொள்கையை (Policy of Special Discrimination) வகுக்க இதுவே சரியான தருணமாகும்.

3. ஒப்பீட்டளவில் முன்னேற்றமடைந்த குழுக்களுடன் போட்டியிட முடியாத குழுக்களை சேர்ந்தவர்களிடையே அதிருப்தி, ஏமாற்றம், தோற்கடிக்கப்பட்ட மனநிலை ஆகிய உணர்வுகள் நிலவுகின்றன. சமமற்ற போட்டி நிலவுகின்ற இதைப்போன்ற ஒரு தருணத்தில் பட்டியலிடுதலின் பிரச்சினையை (Question of Scheduling) விமர்சனப் பூர்வமாக பரிசோதனை செய்வது அவசியமாகிறது.

மனித உரிமை பாதுகாவலர்களால் போற்றப்படுகிற நீதிபதி கிருஷ்ணய்யர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1990-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் ஆற்றிய உரையில் இப்பிரச்சினை தொடர்பாக கூறியுள்ள விபரங்கள் கீழே தரப்படுகிறது.

பட்டியலினச் சாதிகள் தமது தாழ்ந்த படிநிலை அமைப்புக்குள்ளேயும், சில சாதிகள் மேல், சிலசாதிகள் கீழ் என்ற வகையில் பல்வேறு அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளனர் என்பதில் ஐயமில்லை. கீழ் சாதினருக்குள்ளேயும் கீழனவர்களாக ஆக்கப்பட்டவர்கள் பிறரைவிடக் கூடுதலாக பாதிக்கப்படுகிறார்கள். பட்டியலினச்சாதிகளுக்கு அளிக்கப்படும் பயன்கள் மேல் அடுக்கில் உள்ள சாதிகளாலேயே மறிக்கப்பட்டுவிடுவதால், கீழ்நிலையில் இருப்போரை நிரந்தரமாகக் கீழ் நிலையில் இருக்கும்படி செய்துவிடுவதை தடுக்க சமூகத்துக்கு உகந்த கொள்கை வகுப்பவர்கள் நடைமுறை சார்ந்த புது உத்திகளை வகுக்கவேண்டும். ஹரிஜன மக்களிலேயே மிகவும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனித்த முக்கியத்துவம் அளிக்கக்கூடிய, மிகவும் தேவையில் உள்ள, அவர்கள் சமப்படுத்தலை உணரும் வகையிலான, ஒரு முறையியல் மிகவும் இன்றியமையாததாகியது. ஹரிஜன மக்களுக்குள்ளேயே மிகவும் சக்தி வாய்ந்த குழுக்கள்

பயன்களை உறிஞ்சிவிடுவதால் , கல்வி இடங்களிலும், பணியிடங்களிலும், இடஒதுக்கீடு வழங்கும் ஒரு சமூக ஏற்பாட்டின் நடைமுறைக் காரணம் தன் இலக்கிலிருந்து பெரும்பாலும் தவறிவிடுகிறது. எனவே ஹரிஜனங்களின் ஒதுக்கீட்டில் ஒரு திட்டமான பகுதி மிகவும் அடிமட்டத்தில் உழலும், கீழான தொழில்களைச்செய்யும், ஏழ்மையில் நேரடியாக உழலும் குறிப்பிட்ட சாதி குழுக்களுக்கு துணை ஒதுக்கீடு வழங்கும் முறை ஒரு நடைமுறைத்திட்டத்தின் ஒரு கொள்கையாக வகுத்தெடுக்க வேண்டும்.

மேற்கண்ட பரிந்துரைகளும், அறிக்கைகளும் சமூகத்தில் நிலவுகிற உண்மை நிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது. அதில் உள்ள நியாயத்தை யாரும் மறுக்கமுடியுமா? அருந்ததியர்களைப் பொருத்தமட்டில் லோக்குர் கமிஷனின் பரிந்துரையில் இட ஒதுக்கீட்டின் பயன்கள் அடிமட்டத்தில் உழலும் சாதிகளுக்குச் சென்று சேரவில்லை என்பதை உணர்த்துவதை நன்றியோடு ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் ஒப்பீட்டளவில் முன்னேற்றமடைந்த 28-சாதிகளை பட்டியலில் இருந்து நீக்கும் ஆலோசனையை அருந்ததியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை வலியுறுத்திச் சொல்வதோடு, அத்தகைய நடவடிக்கை தலித்துக்களை நிரந்தரமாகப்பிரித்துவிடும் என்றும் அருந்ததியர்கள் அஞ்சுகிறார்கள். அப்படியான நடவடிக்கைக்குப்பதிலாக துணைசாதிகளுக்குரிய பங்கை அவரவர் எண்ணிக்கைக்கு ஏற்ப உள் ஒதுக்கீடாகப் பிரித்து வழங்குவதையே விரும்புகிறார்கள்.

அவ்வாறு உள் ஒதுக்கீடு வழங்குவதால் ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து ஆராய மத்திய அரசு அமைத்த உஷாமெஹ்ரா ஆணையம் தனது பரிந்துரைகளை உள்ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக அண்மையில் அளித்துள்ளது. இப்போது இருக்கும் வடிவத்தில் இடஒதுக்கீட்டுப்பயன்கள் அடிமட்டத்தில் உள்ள சாதிகளுக்கு உரிய அளவில் சென்றடைவதற்கு வாய்ப்பே இல்லை- என்று தனது பார்வையை அவ்வாணையம் முன்வைக்கிறது.

அவ்வாறு முன்வைப்பதுடன் தனது பரிந்துரையை கீழ்க்கண்டவாறு முடிக்கிறது.

கமிஷன் இவ்வாறு அரசியலமைப்புச் சட்டத்தின் 341-ஆவது விதியைத் திருத்தம் செய்து கீழ்க்கண்டவாறு 3-ஆவது பிரிவு (Clause (3)) அதற்கு இணைத்துக்கொள்ளலாம் என்று பரிந்துரைக்கிறது.

341(3) ஒரு மாநிலச்சட்டமன்றம் அல்லது ஒன்றிய பிரதேசச் சட்டமன்றம் ஏகமனதாய் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டதன் பேரில் பாராளுமன்றச் சட்டத்தின்படி பிரிவு( 1 )-இன் கீழ் வழங்கப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட அல்லது பிரிவு ( 2 )-இன் கீழ் பாராளுமன்றம் உருவாக்கிய சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு சாதியையோ, இனத்தையோ அல்லது பழங்குடியின் பகுதியையோ வகைப்படுத்துவதையோ அல்லது வகைப்படுத்துதலை நீக்கவோ வழிவகை செய்யலாம். இது அருந்ததியர்களின் உள் ஒதுக்கீட்டுக் கோரிக்கைக்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதை எடுத்துக்காட்டப் போதுமானது ஆகும்.

கால்நூற்றாண்டு கால அருந்ததியர்களின் போராட்டத்தின் பயனாய் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக்கழக அரசு ஜனவரி23, 2008-இல் சட்டமன்றத்தில் ஆளுநர் உரையில் அருந்ததியர் வகுப்பினர் சமூகப் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்தம் முன்னேற்றத்திற்குச் சிறப்புச்சலுகைகள்

அளிப்பது அவசியமெனக் கருதி தற்போது ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இடஓக்கீட்டில் இவர்களுக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்குவதுபற்றி அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது- என அறிவித்தது. அதைத்தொடர்ந்து 12.03.2008 -அன்று அருந்ததியர் உள் ஒதுக்கீடு தொடர்பான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் சென்னையில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளோடு ஆதித்தமிழர் பேரவை நிறுவனத்தலைவர் திரு.அதியமான் அவர்கள் இடஒதுக்கீடு சம்பந்தமான சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்து இடஒதுக்கீட்டின் தேவையை ஆணித்தரமாக விளக்கினார், நிறுவனத்தலைவர் கோரிக்கையை ஏற்று அனைத்து கட்சித்தலைவர்களும் (புதிய தமிழகம் தலைவர்- கிருஷ்ணசாமி நீங்கலாக) உள் இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

அக்கூட்டத்தில் முதல்வர் வாசித்த அறிக்கையில் 2001-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் அருந்ததியர்களின் மக்கள் தொகை 7,77,659. சக்கிலியர் மக்கள்தொகை 7,77,139 இவ்விரு பிரிவுகளையும் சேர்த்தால் மொத்தம் 15,48,798 இந்த இருபிரிவினர் மொத்த ஆதிதிராவிடர் மக்கள் தொகையில் 13.06% ஆகும். எனவே, அருந்ததியருக்கு 2.35% என்ற அளவில் மொத்த ஓதுக்கீடான 18 சதவீதத்தில் வழங்க வேண்டி வரலாம் என்று குறிப்பிட்டார். இந்த கணக்கு குறித்து அருந்ததியர்கள் சார்பாக அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட அதியமான் அவர்கள் தம்முடைய ஆட்சேபனையை தெரிவித்தார். அருந்ததியர் பற்றிய கணக்கெடுப்பு மாநில முதல்வர் அவர்களுக்கு தவறாக தெரிவிக்கப்பட்டுள்ளது, அருந்ததியர்கள் ஏறக்குறைய 17 பிரிவுகளின் கீழ் உள்ளார்கள். அதில் 2 பிரிவுகளை மட்டும் கணக்கெடுப்பில் எடுத்துக்கொண்டது ஏற்றுக்கொள்ள முடியாதது என ஆட்சேபனை தெரிவித்ததார்,இதனை அனைத்து கட்சித்தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர், அதன் தொடர்ச்சியாக தங்கள் தலைமையிலான இந்த கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கமிஷனின் நோக்கமாக சொல்லப்பட்டவை வருமாறு (1) அருந்ததியர் என்ற பிரிவுக்குள் எந்தெந்த துணை சாதிகள் எல்லாம் சேர்க்கப்பட வேண்டும். (2) அவர்களுக்கு என்ன அளவில் உள்ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இவை குறித்து ஆய்வு செய்து பரிந்துரை வழங்குவதாகும்.

முதல் நோக்கமான அருந்ததியர் என்ற பிரிவுக்குள் எந்தந்த துணை சாதிகள் எல்லாம் சேர்க்கப்பட வேண்டும் என்பது குறித்து பார்க்கலாம். ஓஸ்மானியா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் ஆந்திராவின் மாதிகா இயக்கத்தின் அறிவு ஜீவியான பி. முத்தையா ஆந்திர தலித் சாதிகளை நான்கு பிரிவுகளுக்குள் வகைப்படுத்துவது குறித்த முறைகளை நமக்கு அறியத்தருகிறார். அவை பின்வருவனவாகும்.

### (அ). தீண்டத்தக்க குழுக்களின் கொள்கை:-

சாதியமைப்புமுறை சமூகத்தை தீண்டத்தக்க மற்றும் தீண்டத்தகாத குழுக்களாகப் பிரித்தது. நான்கு வர்ணங்களுக்குத் தீண்டத்தகாதவர்களாக பஞ்சமர்கள் இருந்து வருகிறார்கள். இதே மரபில் தலித்துகளும் தங்களுக்குள் தீண்டத்தக்க மற்றும் தீண்டத்தகாத குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். வேறு வார்த்தைகளில் சொன்னால் தூய்மை, தீட்டு ஆகிய பார்ப்பனீய மதிப்பீடுகள் அட்டவணைச்சாதிகளிடையேயும் கசிந்து பரவி அவற்றை தீண்டத்தக்க மற்றும் தீண்டத்தகாத குழுக்களாகப்பிரித்தது. தமிழ் நாட்டில் பறையர், பள்ளர், அருந்ததியர் ஆகியவை தனித்தனி தமக்குள் தீண்டத்தக்க குழுக்களாகும்.

**( ஆ ). சார்ந்து வாழும் கொள்கை:-**

மரபுவழி சாதிய மதிப்பீடுகள் அட்டவணைச்சாதிகளை அருந்ததியர், பள்ளர், பறையர் என்று பிளவுபடுத்தி தனித்தனி வாழிடங்களில் (தெருக்களில்) கூட்டமாக சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள்.அவ்வாறு கூட்டமாக வாழ்பவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள் அந்த குழுக்களோடு இணைந்து அடையாளம் காணப்படுகிறார்கள்.

**( இ ). இணைச்சாதிகள் கொள்கை:-**

சாதியமைப்புமுறை நாட்டின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு இடங்களில் வெவ்வேறு சாதிகளை வாழும்படி செய்திருக்கிறது. வெவ்வேறு மாநிலங்களில் இருந்து குடிபெயர்ந்து வந்தாலும் சம அந்தஸ்துள்ள சாதிகள் ஒரே குழுவாகக்கொள்ளப்படுகின்றன. அட்டவணைச் சாதிகளைத் தெரிந்தெடுப்பதற்கு இத்தகைய இணைச்சாதிகள் ஒரே குழுவாகச் சேர்க்கப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள அருந்ததியர்களின் தொழில் காரணமாக மாதிகாக்களும், ஆந்திரா மற்றும் ஆதிகர்நாடகா சாதியிலுள்ள மாதிகாக்களும் இணையான சாதிகளாகக் கருதப்படும் ஒரே குழுவாக கணக்கிடப்படலாம். மேலும், ஜக்காலி, ஜாம்பவுலு சாதிகளும் இணையான சாதிகளாகக் கருதப்படுகின்றன.

**( ஈ ). பொதுப்பெயர் கொள்கை:-**

ஒரு குலத்தின் முக்கிய அம்சமாகப் பொதுப்பெயர் திகழ்கிறது. அவை பொதுவான வரலாறு -பொதுக்கடவுள் போன்றவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. இடஒதுக்கீட்டுப்பயன்கள் இவ்வாறு பொதுபெயர் உடைய குழுக்களிடையே பகிர்ந்து அளிக்கப்படுகின்றன.

**( உ ). பரம்பரைத் தொழில்களில் சமநிலைக் கொள்கை:-**

துணைச்சாதிகளின் பரம்பரைத் தொழிலே சாதிப்படிநிலையின் அடிப்படையாக இருந்து வருகிறது. சமுதாயத்தின் ஒவ்வொரு சாதிக்கும் வர்ணதர்மம் ஒரு குறிப்பிட்ட பரம்பரைத்தொழிலை நிர்ணயித்திருக்கிறது. வைதீகப்பண்டிதர்கள் இந்த பரம்பரைத் தொழில்களுக்கு குறிப்பிட்ட அந்தஸ்தை நிர்ணயித்து, புனிதம், தீட்டு என்ற கருத்துக்களின் படி அவற்றை விளக்கவும் செய்தனர். பரம்பரைத் தொழில்களின் அடிப்படையில் பட்டியல் இனச்சாதிகள் இடஒதுக்கீட்டுப் பயன்களைப் பகிர்ந்தளிக்கக் குழுக்களாகப் பகுக்கப்பட்டனர்.

அருந்ததியர்களின் பரம்பரைத் தொழிலாக தோல் தொழிலும் விவசாயகூலி வேலையும் இருந்து வருகிறது. இடைக்காலத்தில் துப்புரவுத்தொழிலும் அவர்கள் மேல் சுமத்தப்பட்டது. இத்தொழில்களைச் செய்துவருகிற அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, பகடை, தோட்டி, செம்மான் என்பன பரம்பரைத் தொழில்களின் அடிப்படையில் அருந்ததியர் குழுவில் சேர்க்கப்படலாம்.

**( ஊ ). குழு நலன் பாதுகாப்புக் கொள்கை:-**

ஒன்று அல்லது இரண்டு சாதிகளின் தனியாதிக்கத்திற்கு பதிலாக இட ஒதுக்கீட்டின் பங்கு அட்டவணைச் சாதிகளின் மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் தீர்மானிக்கப்படுகிறது. அவ்வாறு எந்தவொரு துணைச்சாதியும் மக்கள் தொகைக்குப்பொருந்தாத வகையில் ஒதுக்கீட்டின் பயன்களை மேலாதிக்கம் செய்ய அனுமதிக்கக் கூடாது. ஒவ்வொரு துணைச்சாதியின் நலன்களும் பாதுகாக்கப்படும் வகையில் வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் ஓராயிரம் முதல் லட்சங்கள் வரை மக்கள் தொகை உள்ள துணைச் சாதிகள் அட்டவணைகளில் உள்ளன. ஒவ்வொரு துணைச் சாதிகளின் நலன்களும், பாதுகாக்கப்பட, பிரதிநிதித்துவம் கிடைக்காத குறைந்த பிரதிநிதித்துவம் உடைய, போதிய பிரதிநிதித்துவமுடைய சாதிகள் அடையாளம் கண்டறியப்படவேண்டும். முதல் முன்னுரிமை பிரதிநிதித்துவம் கிடைக்காதவற்றுக்கும், இரண்டாவது முன்னுரிமை குறைந்த பிரதிநிதித்துவமுடைய சாதிகளுக்கும் இடஒதுக்கீட்டுப்பயன்கள் நிர்ணயிக்கப்படுகையில் ஒவ்வொரு குழுவிலும் தரப்பட வேண்டும்.

மேற்கண்ட விளக்கங்களின்படி தமிழ்நாட்டில் அருந்ததியர் என்ற பிரிவில் அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, பகடை, தோட்டி, செம்மான், மாதிகா. பகுடா ஆகிய சாதிகளும் மற்றும் ஆதி திராவிடர் பிரிவிலுள்ள அருந்ததியர்களும் இணைக்கப்படவேண்டும். ஆதி ஆந்திரா ஆதித கர்நாடகா சாதியிலுள்ள மாதிகாக்கள் ஆந்திரா கர்நாடகாவுடன் தொடர்புள்ளவர்கள் காலச்சாரத்தில் பண்பாட்டில், மொழியில் தமிழர்களிடமிருந்து மாறுபட்டவர்கள என்பதால் மொழிச் சிறுபான்மையினராக கருதப்பட்டு அவர்களுக்கு தனியாக இட ஒதுக்கீடு வழங்கவேண்டும் இவற்றுள் அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, பகடை, தோட்டி, செம்மான் மற்றும் பகுடா என்பவை ஒரே சாதியின் வேறு பெயர்கள். இவர்கள் அனைவரும் அருந்ததியர் என்ற பொது அடையாளத்துக்குள்ளே அடையாளம் காணப்படுவார்கள். அருந்ததியர் என்ற பெயரை முன் வைத்தே தங்கள் இயக்கங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள். ஒரே குடும்பத்திற்குள்ளேயே இவற்றுள் ஒன்றுக்கும் மேற்பட்ட பெயர்களில் அவர்கள் வழங்கப்படுவது அருந்ததியர்களுக்குள் மிகச்சாதாரணம். தமிழ்நாடு அருந்ததியர்களில் கணிசமானவர்கள் தவறுதலாகவும், அறியாமையினாலும் ஆதி ஆந்திரா, ஆதி கர்நாடகா என்பது போன்ற பிரிவுகளுக்குள் சேர்க்கப்பட்டிருப்பதாலும், இக்குறிப்பிட்ட சாதிகள் இணைச்சாதிகள் என்ற கொள்கையின்படி அருந்ததியர் என்ற பிரிவுக்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். ஆக அருந்ததியர் என்ற பிரிவுக்குள் அருந்ததியர் , சக்கிலியர், மாதாரி, பகடை, தோட்டி, செம்மான், மாதிகா, ஆதி திராவிடரில் உள்ள அருந்ததியர்கள் ஆகிய சாதிகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

ஆணையத்தின் 2-ஆவது நோக்கமான அருந்ததியர் பிரிவுக்குள் என்ன அளவில் உள் ஒதுக்கீடு வழங்குவது என்று பரிந்துரை வழங்குவது குறித்து அருந்ததியர் உள் ஒதுக்கீடு கோரிக்கையை ஆதித் தமிழர் பேரவை எழுப்பியதே தங்கள் மக்கள் தொகைக்குரிய அளவில் பிரதிநிதித்துவம் இல்லை என்பதை முன் வைத்துதான். அதனால் தங்கள் மக்கள் தொகைக்குரிய

அளவில் உள் ஒதுக்கீடு வேண்டுமென்றுதான் ஆதித்தமிழர் பேரவை கோருகிறது. கெடுவாய்ப்பாக அருந்ததியர்களுக்கு மட்டுமல்ல எந்தவொரு சாதிக்கும் துள்ளியமான மக்கள் தொகை குறித்த கணக்கு என்பது இல்லை.

இதற்கான மிக முக்கியமான காரணங்கள் இரண்டு. முதற்காரணம் தமிழ்நாடு என்பது தலித்துக்களின் இயக்கங்கள் துவக்க காலத்திலிருந்தே தீவிரமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த மாநிலங்களில் ஒன்று. தொடக்ககால தலித் இயக்கங்களின் போக்கு என்பது கொள்கையளவிலாவது தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமையை சாதிப்பது என்பதை மையமாகக் கொண்டிருந்தது. இவ்வியக்கங்கள் ஆதிதிராவிடர் என்பதை இவ்வாறான ஒற்றுமையின் மற்றும் விடுதலையின் அடையாளமாக முன்வைத்து செயல்பட்டன. இந்த நீண்ட தொடர்ச்சியின் விளைவாக ஆதிதிராவிடர் என்ற பொதுப்பெயரில் பெரும்பான்மை தலித்துக்கள் திரண்டது நடைமுறை ஆயிற்று.

இரண்டாவது காரணம் என்னவெனில் அருந்ததியர்கள் என்னும் சாதி தனக்கு கீழே சாதி படி நிலை அமைப்பில் எந்த சாதியும் இல்லாதது. அதனால் தமிழ் நாட்டுச்சாதிகளிலேயே கீழானதாக கருதப்படும் நிலை இருக்கிறது. இந்தக்காரணத்தினால் தலித்துகளிடம் உள்ள அந்நியமாதல் உணர்வு அருந்ததியர்களிடம் கூடுதலாக வெளிப்படுவதாக உள்ளது. இதனால் கணிசமான அளவுக்கு அருந்ததியர்கள் ஆதிதிராவிடர்கள் என்ற பெயரில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு ஆதிதிராவிடர் என்ற பெயருக்குள் சேர்க்கப்பட்ட அருந்ததியர்கள் குறித்த துள்ளியமான கணக்கு எதுவுமில்லை. எனவே அருந்ததியர்களின் மக்கள் தொகை குறித்த திட்டமான முடிவுக்குவர சிரமமாக உள்ளது.

ஆதி திராவிடர் என்பது பொதுப்பெயர்தான் என்பதை விளக்க இரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது.

(1) . பறையன், பள்ளன், சக்கிலியன் என்கிற மாதிரியான சாதிப்பெயர்கள் தங்களை இழிவுபடுத்தியதாகக் கூறிய அன்றைய தலித் தலைவர்கள், அன்றைய சென்னை மாகாணத்தில் தமிழ் பேசும் மாவட்டங்களில் உள்ள தலித்துக்களை ஆதி திராவிடர் என்றும், தெலுங்கு பேசும் மாவட்டங்களில் உள்ள தலித்துகளை ஆதி ஆந்திரர்கள் என்றும் குறிப்பிட வேண்டும் எனக்கோரி பெரிய போராட்டங்களை நடத்தியுள்ளனர். அவற்றின் விளைவாக 1924-ஆம் ஆண்டில் பறையர், பள்ளர், சக்கிலியர், மாதிகா மற்றும் தொம்பா என்னும் பெயர்களுக்குப்பதிலாக ஆதி திராவிடர் அல்லது ஆதி ஆந்திரர் என்றே குறிப்பிட வேண்டும் என்றும் அரசாணையே பிறப்பிக்கப்பட்டது ( அரசாணை எண்:3571).

(2). சக்கிலியன் என்று பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததை எதிர்த்து சென்னை மாகாண அவையில் பலமுறை வீரையன் ஆட்சேபம் தெரிவித்து பேசிய விபரங்களை சட்டமன்ற ஆவணங்கள் விளக்குவதை ஒரு கட்டுரைச் எடுத்துக்காட்டி ஆதி திராவிடர் என்பது பொதுப் பெயர்தான் என்று நிரூபிக்கிறது.

ஆதிதிராவிடர் என்பது பொதுப்பெயர்தான் என்பதை நிரூபிக்கும் இன்னொரு செய்தி என்னவென்றால், அப்பெயரில் கணக்கிடப்படும் மக்கள் தொகை ஒவ்வொரு முறையும், ஒவ்வொருவிதமாக வருவதுதான். சில ஆண்டின் கணக்குகளை கீழே பார்க்கலாம்.

| | | |
|---|---|---|
| 1931 மொத்த மக்கள் தொகை | ; | 72,99,400 |
| ஆதிதிராவிடர் | : | 16,19,227 |
| சதவீதத்தில் | : | 21.2% |
| 1961 மொத்த தலித் மக்கள் தொகை | : | 60,67,327 |
| ஆதிதிராவிடர் | : | 17,63,000 |
| சதவீதத்தில் | : | 27.2% |
| 1981 மொத்த தலித் மக்கள் தொகை | : | 74,27,398 |
| ஆதிதிராவிடர் | : | 38,31,152 |
| சதவீதத்தில் | : | 51.6% |
| 2001 மொத்த தலித் மக்கள் தொகை | : | 1,18,57,504 |
| ஆதிதிராவிடர் | : | 54,02,755 |
| சதவீதத்தில் | : | 45.6% |

மேற்கண்ட புள்ளி விவரங்கள் ஆதிதிராவிடர் என்பது ஒரு குறிப்பிட்ட சாதியைக்குறிப்பிடுவது என்றால் அதன் மக்கள் தொகை சதவீதம் என்பது ஓரளவுக்கேனும் நிலையாக இருக்கவேண்டும். அப்படி இருக்கவில்லை என்பதையே இவை காட்டுகின்றன.

மேலும் ஆதிதிராவிடர் என்ற பெயரில் கணக்கிடப்படும் மக்கள் எவ்வாறு பரவியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தாலும் சில உண்மைகள் தெரியவரும். எனவே மாவட்ட வாரியாக ஒவ்வொரு சாதியும் எவ்வாறு பரவிக்கிடக்கின்றன என்பதையும் காணலாம்.

| வ.எண் | மாவட்டம் / மொத்த மக்கள் தொகை | ஆதி திராவிடர் | | அருந்ததியர் | | பறையர் | | பள்ளர் | | மொத்த மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மக்கள் தொகை | சதவீதம் | மக்கள் தொகை | சதவீதம் | மக்கள் தொகை | சதவீதம் | மக்கள் தொகை | சதவீதம் | |
| 1 | திருவள்ளூர் | 5,55,048 | 92.4% | 14,884 | 2.5% | 5,312 | 0.8% | 3,996 | 0.7% | 6,00,858 |
| 2 | சென்னை | 5,31,326 | 88.8% | 7,810 | 1.3% | 6,942 | 1.2% | 4,813 | 0.8% | 5,98,110 |
| 3 | காஞ்சிபுரம் | 6,86,816 | 95.1% | 8,839 | 1.2% | 6,025 | 0.8% | 6,743 | 0.9% | 7,21,989 |
| 4 | வேலூர் | 6,27,045 | 87.8% | 70,095 | 9.8% | 558 | 0.1% | 575 | 0.1% | 7,14,054 |
| 5 | தர்மபுரி | 3,24,661 | 77.9% | 52,748 | 12.7% | 1,587 | 0.4% | 1,432 | 0.3% | 4,16,951 |
| 6 | கடலூர் | 6,04,042 | 95.2% | 14,406 | 2.3% | 4,958 | 0.8% | 1,606 | 0.3% | 6,34,479 |
| 7 | நாகப்பட்டினம் | 2,39,809 | 54.4% | 1,502 | 0.3% | 1,07,913 | 24.5% | 77,784 | 17.6% | 4,41,231 |
| 8 | திருவாரூர் | 14,335 | 3.8% | 2,197 | 0.6% | 1,68,840 | 44.6% | 1,84,970 | 48.9% | 3,78,314 |
| 9 | தஞ்சாவூர் | 37,438 | 9.4% | 7,155 | 1.8% | 2,09,903 | 52.5% | 1,31,568 | 33% | 3,99,653 |
| 10 | புதுக்கோட்டை | 17,974 | 7.2% | 4,243 | 1.7% | 1,25,066 | 50.1% | 94,185 | 37.8% | 2,49,471 |
| 11 | சிவகங்கை | 3,265 | 1.7% | 10,580 | 5.6% | 72,781 | 38.5% | 95,478 | 50.6% | 1,88,857 |
| 12 | திருவண்ணாமலை | 4,26,459 | 91.2% | 30,527 | 6.5% | 2,165 | 0.5% | 562 | 0.1% | 4,67,532 |
| 13 | விழுப்புரம் | 7,81,418 | 96.4% | 18,531 | 2.3% | 1,639 | 0.2% | 704 | 0.1% | 8,10,931 |
| 14 | சேலம் | 1,94,349 | 40.4% | 1,48,858 | 31.9% | 95,325 | 20% | 24,466 | 5.1% | 4,75,738 |
| 15 | நாமக்கல் | 55,360 | 19.7% | 1,55485 | 55.4% | 11,520 | 4.1% | 46,659 | 16.6% | 2,80,776 |

| வ.எண் | மாவட்டம் / மொத்த மக்கள் தொகை | ஆதி திராவிடர் | | அருந்ததியர் | | பறையர் | | பள்ளர் | | மொத்த மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மக்கள் தொகை | சதவீதம் | மக்கள் தொகை | சதவீதம் | மக்கள் தொகை | சதவீதம் | மக்கள் தொகை | சதவீதம் | |
| 16 | ஈரோடு | 59,810 | 14.2% | 2,93,928 | 69.6% | 15,524 | 3.7% | 30,239 | 7.2% | 4,22,204 |
| 17 | நீலகிரி | 72,900 | 30.6% | 23,528 | 9.9% | 75,729 | 31.8% | 34,767 | 14.6% | 2,38,014 |
| 18 | கோவை | 61,477 | 9.7% | 4,15,723 | 65.9% | 46,949 | 7.4% | 74,093 | 11.7% | 6,30,675 |
| 19 | திண்டுக்கல் | 5,275 | 1.4% | 1,22,816 | 32.6% | 84,443 | 22.00% | 1,51,192 | 40.2% | 3,76,170 |
| 20 | கரூர் | 1,837 | 0.9% | 67,590 | 35.5% | 43,704 | 23.00% | 70,888 | 37.3% | 1,90,260 |
| 21 | திருச்சி | 10,049 | 2.5% | 52,077 | 13.00% | 1,15,553 | 30.00% | 2,09,787 | 52.5% | 3,99,493 |
| 22 | பெரம்பலூர் | 11,108 | 7.4% | 11,450 | 7.7% | 1,01,550 | 68.00% | 22,304 | 15.00% | 1,49,145 |
| 23 | அரியலூர் | 28,154 | 18.6% | 6,786 | 4.5% | 1,09,782 | 72.6% | 2,510 | 1.7% | 1,51,220 |
| 24 | மதுரை | 2,953 | 0.9% | 62,504 | 19.3% | 1,24,365 | 38.5% | 1,24,700 | 38.6% | 3,23,252 |
| 25 | தேனி | 841 | 0.4% | 59,563 | 28.1% | 53,555 | 23.3% | 91,783 | 43.3% | 2,11,800 |
| 26 | விருதுநகர் | 2,780 | 0.8% | 52,561 | 15.8% | 68,890 | 20.7% | 1,97,727 | 59.5% | 3,32,297 |
| 27 | இராமநாதபுரம் | 1,114 | 0.5% | 24,335 | 11.3% | 16,345 | 7.6% | 1,61,995 | 74.9% | 2,16,312 |
| 28 | தூத்துக்குடி | 10,376 | 3.6% | 27,336 | 9.5% | 55,416 | 19.2% | 1,84,035 | 3.7% | 2,88,954 |
| 29 | திருநெல்வேலி | 32,059 | 6.7% | 46,313 | 9.6% | 92,426 | 19.2% | 2,94,624 | 1.2% | 4,81,052 |
| 30 | கன்னியாகுமரி | 2,677 | 4.00% | 2,272 | 3.4% | 37,726 | 55.5% | 3,712 | 8.5% | 67,712 |

இந்த அட்டவணையின் மூலம் அறியும் விபரம் என்னவெனில் ஆதிதிராவிடர் என்ற பெயரில் உள்ள மக்கள் தொகை தமிழ்நாடு முழுக்க பரவலாக பரவிக்கிடக்கவில்லை. எப்படியெனில் (1). திருவள்ளூர் (2). சென்னை (3). காஞ்சிபுரம் (4). வேலூர் (5). கடலூர் (6). திருவண்ணாமலை (7).விழுப்புரம் ஆகிய 7-மாவட்டங்களிலும் சராசரியாக 92 % தலித் மக்கள் ஆதிதிராவிடர் என்றே கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் 78% மக்கள் அப்பெயரில் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். இதைத்தவிர்த்த மாவட்டங்களில் ஒரு பெரும்பான்மையான சாதி அதிகபட்சமாக 70% என்ற அளவில்தான் மக்கள் தொகை கொண்டதாக இருக்கிறது. இதை வைத்தும் ஆதிதிராவிடர் என்ற பெயரில் கணக்கிடப்பட்டுள்ள மக்கள் தொகையில் பெருமளவுக்கு அருந்ததிய மக்கள் கலந்தவிட்டிருப்பதை அறியமுடியும்.

அருந்ததிய மக்கள் தொகை குறித்து ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னால் அனைத்து கட்சிக்கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அருந்ததியர்களின் மக்கள் தொகை 13.06% என்றும் 2.35% அவர்களுக்கு ஒதுக்கீடு வழங்க வேண்டியிருக்கும் என்று கூறியிருப்பது குறித்து தங்கள் அதிருப்தியை அன்றே ஆதித்தமிழர் பேரவை பதிவு செய்திருக்கிறது. அதன் விபரம் கீழே தரப்படுகிறது,

முதல்வர் அளித்த கணக்கு முழுமையற்றது. அருந்ததியர் என்ற பிரிவில் வருவனவற்றுள் இரண்டு சாதிகளை மட்டும் கணக்கில் வைத்துக்கொண்டு பிற பெயர்களில் உள்ள மக்கள் தொகையை விட்டிருக்கிறார்கள். நாம் முன்னர் பார்த்தபடி அருந்ததியர் என்ற பிரிவில் அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, பகடை, தோட்டி, செம்மான், மாதிகா ஆகிய பெயர்களிலுள்ள மக்கள் தொகை மட்டும் ஆதி ஆந்திரா, ஆதி கர்நாடகா, ஜக்காலி, ஜாம்பவுலு பின்வருமாறு: இந்தக்கணக்கில் ஆதிதிராவிடர் என்ற பெயரில் உள்ள அருந்ததியர்கள் இல்லை என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

2001-ஆம் ஆண்டு கணக்கின்படி

| | | |
|---|---|---|
| அருந்ததியர் | : | 7,71,659 |
| சக்கிலியர் | : | 7,77,139 |
| மாதாரி | ; | 2,49,494 |
| பகடை | ; | 13,795 |
| தோட்டி | ; | 3,896 |
| செம்மான் | ; | 1,941 |
| ஆதி ஆந்திரா | : | 40,371 |
| ஆதி கர்நாடகா | ; | 36,530 |
| ஜக்காலி | : | 665 |
| ஜாமபவுலு | ; | 72 |
| மாதிகா | : | 5,103 |

இது மொத்த தலித் மக்கள் தொகையான 1,18,57,504 இல் 16.03% ஆகும். இதையே 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால்

1981-ஆம் ஆண்டு கணக்கின் படி;-

| | |
|---|---|
| அருந்ததியர் | ; 4,24,209 |
| சக்கிலியர் | ;5,13,365 |
| மாதாரி | ;3,46,899 |
| பகடை | ; 17,863 |
| தோட்டி | ; 4,536 |
| செம்மான் | ; 992 |
| ஆதி ஆந்திரா | : 50,391 |
| ஆதி கர்நாடகா | : 30,073 |
| ஜக்காலி | : 1,248 |
| ஜாம்பவுலு | ; 131 |
| மாதிகா | ; 6,195 |
| | 13,95,902 |

இது மொத்த மக்கள் தொகையான 74,27,398இல் 18.79% ஆகும். ஆதி திராவிடர் என்ற பொதுப்பெயரில் உள்ள அருந்ததியர்களின் மக்கள் தொகை ஐந்தில் ஒருபங்கு ( 1/5 ) என்று வைத்துக் கொண்டால் 1981-இல் அருந்ததியர் மக்கள் தொகை 21,62,132-இது மொத்த தலித் மக்கள் தொகையில் 29.1% ஆகிறது. அவ்வாறே 2001-இல் அருந்ததியர் மக்கள் தொகை 29,81,215, இது சதவீதக் கணக்கில் 25.1% ஆகிறது.

இந்த இடத்தில் இன்னும் சில செய்திகள் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளன. மேற்கண்ட கணக்கோடு, வகைப்படுத்த முடியாதவர்கள் என்ற பிரிவில் உள்ள 55,986 பேரில் உள்ள அருந்ததியர்களின் எண்ணிக்கை, மக்கள் தொகை கணக்கெடுப்பில் விடுபட்ட அருந்ததியர்களின் மக்கள் தொகை மற்றும் பிழைப்பிற்காக இடம் பெயர்ந்துள்ள அருந்ததியர்களின் மக்கள் தொகை எவ்வளவு என்பது குறித்து எவரிடமும் கணக்குகள் இல்லை. சமூகத்தில் கடைசி மட்டத்தில் உள்ள அருந்ததியர்கள்தான் இவ்வாறான விடுபடல்களில் கூடுதலாக பாதிக்கப்படுபவர்களாக இருப்பவர்கள் என்பதில் ஐயம் வேண்டியதில்லை.

இந்த உண்மையை கணக்கில் கொண்டு பார்த்தால், அருந்ததியர்களின் மக்கட்தொகை தமிழ்நாட்டில் உள்ள மொத்த தலித் மக்கள் தொகையில் 30% இருக்கும் என்று சொல்லமுடியும்.

இதற்கு மொத்த ஒதுக்கீட்டில் 6% அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடாக வழங்குவது நியாயமானதாக இருக்கும். அதற்குக் குறைவாக வழங்குவது அவர்களுக்குரிய பங்கை குறைத்து வழங்குவதாகவே இருக்கும். அருந்ததியர்கள் வாழும் சமூக பொருளாதாரச் சூழலில் இதனால் ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யும் விதமாகப் பொதுப்போட்டியில் அவர்கள் இடங்களைப் பெறுவதென்பது இயலாத காரியம் ஆகும்.

எனவே மேற்கூறிய உண்மைகளைக் கருத்தில் கொண்டு அருந்ததியர்கள் தங்களுக்கு உரிய நியாயமான பங்கைப் பெறும் வகையில் தாங்கள் பரிந்துரைகளை வழங்க வேண்டி ஆதித் தமிழர் பேரவை சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

மிக்க நன்றி